திரு. விநயகம் உள்பட, டாக்டர் திரு. ஹ்ஹாண்டே அவர்கள் கூடத் தெளிவாகச் சொன்னுர்கள். இதை மறுக்கிறேம் என்று சொல்ல வேண்டுமென்று சொன்னுர்கள். நாம் இதிலே மூன்ருவது பாரா விலே அதைத்தான் சொல்லியிருக்கிறேம். அங்கு சொன்னது தவறு என்று நாம் கண்டிக்கிறேம், முடிவுகாணுங்கள் என்று கூறுகிறேம். மறுக்கிறேம் என்பதும் உறுதிப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேம் என்பதும் பொருள் ஒன்றுதான். நல்லவேளையாக மற்றவர்கள் தவருகப் புரிந்து கொண்டாலும் டாக்டர் ஹாண்டே அவர்கள் சரியாகப் புரிந்துகொண்டதற்காக என்னுடைய மகிழ்ச்சி யைத் தெரிவித்து, கல்வியமைச்சர் அவர்கள் சொன்னதைப்போன்று என்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துவைப்பததின்மூலம் இங்கே நடைபெற்ற விவாதம் மக்களின் செவிக்கு எட்டி, திராவிட நாக ரீகத்தைக் காப்பதற்காக இந்த ஆட்சி இருக்கிறது என்ற நிலையிலே, இந்த மன்றத்திலே திராவிட நாகரீகத்தைப்பற்றிப் பேச ஆள் உண்டு என்ற நம்பிக்கை மக்களுக்குக் கிடைத்திருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் தீர்மானத்தை வலியுறுத்தாமல் விட்டுவிடுகிறேன்.

பேரவையின் அனுமதியுடன், திரு. ம. பொ. சிவஞானம் அவர்களுடைய தனித் தீர்மானம் திரும்பப் பெறப்பட்டது.

7. அறிவிப்புகள்.

தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதா (சட்டப் பேரவை மசோதா எண். 23/68)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதாவை (சட்டப் பேரவை மசோதா எண் 23/68) ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் தம் இசைவைத் தெரிவித்திருக்கிருர்கள்.

4. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி

(ஆ) தனி உறுப்பினர் அலுவல்கள் எடுத்துக்கொள்ளப்படும் நாளில் மசோதாக்களை முதலில் எடுத்துக் கொள்ளாதது குறித்து

THIRU K. VINAYAKAM : On a point of order. Sir. During Private Members' Day, it has been an established practice in this House that all the Bills given notice of by Members, should get precedence over the resolutions given by the Members. May I know why the Hon. Speaker has changed that order ? How did this resolution gain priority by ballot paper and how is it that the Bill got second priority by ballot paper ? It has been an established custom that the Bill must be taken up first and then the resolution. That has been the practice. How did it happen that you changed the procedure ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—விதி 145 என்ன சொல்கிறது என்றால்—

Provided that the Speaker, with the consent of the Minister in-charge of the department concerned may allow a resolution to be entered on the list of business with shorter notice than 15 days and without the procedure of a ballot under rule 25 and also fix its order of precedence in such list. என்று இருக்கிறது. ஆகவே விதிப்படிதான் இருக்கிறது.

THIRU K. VINAYAKAM : So the Minister gave consent

MR. SPEAKER : Yes

THIRU K. VINAYAKAM : Because you yourself should not do it *suo motu*.

6. தனி உறுப்பினர் அலுவல்—தொடர்ச்சி
(ஆ) மசோதா.

தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதா
(சட்டப் பேரவை மசோதா எண். 23/68)

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1968-ம் ஆண்டு திருமணங்கள் பதிவு செய்தல் மசோதா (*) (சட்டப் பேரவை மசோதா எண். 23/68) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்'' என்று முன்மொழிகிறேன்.

DR. H. V. HANDE: I second it.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தப் பேரவையின் ஆய்வுக்காக இந்த நாட்டிற்குள் நடக்கிற திருமணங்களையும் தமிழ்நாட்டிற்கு வெளியே நடத்தப்படும் திருமணங்களையும் பதிவு செய்வதற்குரிய மசோதாவைப் பெருமையோடு கொண்டு வருகிறேன்.

இந்த மசோதாவின் நோக்கங்களை நான் மசோதாவிலேயே விளக்கியிருக்கிறேன். இந்த நாட்டில் நடைபெறுகின்ற திருமணங்கள்; சமயச் சடங்குகளோடு நடந்தாலும், சமயச் சடங்குகள் அல்லாத பிற சடங்கு முறைகளில் நடந்தாலும், அல்லது அவற்றைப் புறக்கணித்துவிட்டு வேறு முறையில் நடந்தாலும், அவறறையெல்லாம் பதிவு செய்யவேண்டுமென்று கூறியிருக்கிறேன்.

இன்றைய தினம் நாம் வாழ்கின்ற சூழ்நிலைக்கு நம்முடைய சமுதாயத்திலே உள்ள பல்வேறு கால கட்டங்களிலே ஏற்பட்டிருக்கிற மாற்றங்களுக்கும் ஏற்ப ஒரு முழுமையான நிலைமையை ஏற்படுத்துகின்ற அளவிலே என்னுடைய மசோதாவைக் கொண்டு வந்திருக்கிறேன். திருமணங்களைச் சமயத்தைச் சார்ந்தவர்களிடையே நடத்திக்கொண்டாலும் சரி, அல்லது சமயத்தைச் சேராமல் அதிலே நம்பிக்கையில்லாமல் செய்துகொண்டவர்களாக இருந்தாலும் சரி, சமயச் சடங்குகளிலோ அல்லது மதச் சடங்கு

* 4—9—1968-ம் தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.